## தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை - 11.5.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தியை பெருக்குவதுடன், நமது நாட்டின் பொருளாதார அமைப்பின் துடிப்பான அங்கமாக, உயிர்நாடியாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துதல், போட்டித் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் திறன் வளர்த்தல் ஆகியவற்றை குழும மேம்பாட்டு திட்டத்தின் மூலம் செயல்படுத்த தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தை தமிழக அரசு முகவராக நியமித்துள்ளது. தமிழ்நாட்டில் குழுமத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 50 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதில், 7 திட்டங்கள் முழுமையடைந்துள்ளதோடு மட்டுமல்லாமல், 8 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 திட்டங்கள் நிறைவேற்றப்படும். இந்தத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றும் பொருட்டு, 10 உதவி வளர்ச்சி அலுவலர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு தேவையான தொழில்நுட்பப் பணியாளர்கள் கிடைக்க ஏதுவாக, விருத்தாசலத்தில் அமைந்துள்ள பீங்கான் தொழில்நுட்ப பயிற்சி மையத்தின் மூலம் மூன்றரை ஆண்டு கால “பீங்கான் தொழில் நுட்பம்” பட்டயப் படிப்பும், திண்டுக்கல்லில் உள்ள கருவி பொறியியல் பயிலகத்தின் மூலம் மூன்று ஆண்டு கால அச்சு மற்றும் பொறியியல் படிப்பும், சென்னையிலுள்ள அரசினர் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தின் மூலம் மூன்று ஆண்டு கால இயந்திரவியல் பட்டயப் படிப்புகளில் சிறப்பு பிரிவுகளான அச்சு மற்றும் கருவி பொறியியல் மற்றும் குளிர் பதனம் மற்றும் காற்றுப் பதனவியல்” படிப்புகளும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிலகங்களில் பயிற்சி பெற்ற அனைத்து மாணவர்களும் முன்னணி நிறுவனங்களில் நல்ல வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த இந்த பயிலகங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதை கருத்தில் கொண்டும், மாணவர்களின் தேவைகளுக்கேற்ப மாறிவரும் தொழிற்பயிற்சி திட்டங்களை அளிக்கும் நோக்குத்துடனும், இப்பயிற்சி நிலையங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், மத்திய அரசின் தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் கொள்கையினைத் தொடர்ந்து, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் புதுப்புது சவால்களை ஒவ்வொரு ஆண்டும் சந்தித்து வருகின்றன. இவை உலகளாவிய போட்டியினை சமாளிக்கும் திறனுடன் செயல்பட வேண்டி உள்ளது. எனவே, மாவட்ட தொழில் மையங்களின் பணிகள் நவீனமயமாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

மாவட்ட தொழில் மையங்களின் பணிகளை நவீன முறையில் சீரமைக்கும் பொருட்டு, ஏற்கெனவே சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் மாவட்ட தொழில் மைய அலுவலக கட்டடங்கள் தேவைக்கேற்ப நவீன வசதிகளுடன் சீரமைக்கப்படும். தேவை உள்ள இடங்களில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும். வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் மாவட்ட தொழில் மைய அலுவலகங்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும். மேலும் இம் மையங்களுக்கு தேவையான நவீன கணினி மற்றும் தொலை தொடர்பு சாதனங்கள் நிறுவப்படுவதுடன், இம் மையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்படும். இப் பணிகள் 50 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******